பழங்குடியினர் நல இயக்குநரகம்

| | | |
|---|---|---|
| அனுப்புநர்: | | பெறுநர்: |
| திரு.S.அண்ணாதுரை,C.L.S., | 1. | திட்ட அலுவலர், |
| இயக்குநர், | | (பழங்குடியினர் நலம் ) |
| பழங்குடியினர் நல இயக்குநரகம், | | தருமபுரி ,சேலம், திருவண்ணாமலை, |
| சென்னை – 600 005. | | கள்ளக்குறிச்சி , நாமக்கல், திருப்பத்தூர் |
| | | மற்றும்திருச்சிராப்பள்ளிமாவட்டங்கள். |
| | 2. | மாவட்டஆதிதிராவிடர்மற்றும் |
| | | பழங்குடியினர்நல அலுவலர், |
| | | தொடர்புடைய மாவட்டங்கள் |

ந.க.எண்.ப.மே/ஈ3 /5660/2023, நாள்: 31.10.2023.

அய்யா/அம்மையீர்,

பொருள்: பழங்குடியினர் நலம் - கல்வி – 2023-2024 ஆம்கல்வி ஆண்டில் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி / உயர்நிலைப்பள்ளி / நடுநிலைப்பள்ளி / ஆரம்பப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து நிலை தலைமைஆசிரியர்கள் / அனைத்து நிலை ஆசிரியர்கள் விடுதிகாப்பாளர் / காப்பாளினி ஆகிய பதவிகளுக்கு பணியிட மாறுதல் கலந்தாய்வு On line மூலம்பெறுவது – தனியர்களது மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் On line மூலம் பதிவு செய்வது மற்றும் பின்பற்றப்பட வேண்டிய வழி முறைகள்- தொடர்பாக.

பார்வை:
1 அரசாணை (ப) எண். 132, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத் (ஆதிந7) துறை, நாள். 30.06.2022.
2 அரசு கடிதம் எண்.166/ஆதிந7/2022, நாள்.11.07.2023.
3 தொடர்புடையஆவணங்கள்

-----

பார்வை 2-இல் காணும் அரசு கடிதத்தில் 2023-2024 ஆம் கல்வியாண்டில் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பணியாற்றும் ஆசிரியர் / காப்பாளர் / காப்பாளினிகளுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு Online மூலம் பார்வை 1-இல் காணும் அரசாணையில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 1-இல் காணும் அரசாணையின்படி 2023-2024 ஆம் கல்வியாண்டில் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளி / உயர்நிலைப்பள்ளி / நடுநிலைப்பள்ளி / ஆரம்பப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகைத் தலைமை ஆசிரியர்கள் / அனைத்து நிலை ஆசிரியர்கள் மற்றும் விடுதிகாப்பாளர் / காப்பாளினிகள் ஆகிய பதவிகளுக்கு Online இல் பணியிட மாறுதல் கலந்தாய்வு Transfer Counselling நடைபெற உள்ளது. மேற்கண்ட பதவிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பங்களை புதியதாக Online மூலம் பதிவு செய்யவேண்டும்.

எனவே மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் / திட்ட அலுவலர்கள் (பந) தங்களது மாவட்டத்திலுள்ள அனைத்து மேல்நிலை / உயர்நிலைப்பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் தனிவட்டாட்சியர்களை (ஆதிதிராவிடர் நலம்) அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான ஆசிரியர்களை 02.11.2023 முதல் 15.11.2023 பிற்பகல்6.00 மணிவரை மட்டுமே தங்களது அலுவலகத்திற்கு வந்து On line இல் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவுறுத்த வேண்டும். முன்னுரிமை கோரும் இனங்களுக்கான விண்ணப்பங்களில் அதற்கான சான்றிதழ்களை விண்ணப்பதாரரிடமிருந்து பெற்று கோப்பில் சேர்க்கும் படியும், இயக்குநரகத்திலிருந்து கேட்கும் போது அளிக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி On line ,இல் பதிவு செய்யும் பணியினை மேற்கொள்ளும் பணியாளர்கள் தெளிவாக எந்த தவறும் இன்றி பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த விண்ணபத்தின் நகலினை அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் / திட்ட அலுவலர்கள் (பழங்குடியினர் நலம்) கையொப்பமிட்டு தனியரிடம் விண்ணப்ப நகலை எடுத்து கொடுக்கவேண்டும் .பதிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்களின் நகலினை தொகுத்து பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கு அனுப்ப வேண்டும். On line இல் பொதுமாறுதல் கோரி பதிவு செய்யப்படும் அனைத்து விண்ணப்பங்களிலுள்ள பதிவுகள் செய்யப்படும் பணிசார்ந்த விவரங்கள் (Service Datas) அனைத்தும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / திட்ட அலுலர் மற்றும் தொடர்புடைய அலுவலர்களால் தனியரின் பணிப் பதிவேட்டினைக் கொண்டு நன்கு சரிபார்க்கப்பட்ட பின்னரே பதிவு செய்யப்பட வேண்டும். பணிசார்ந்த விபரங்களில் (Datas) ஏதேனும் தவறுகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கு அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் /திட்டஅலுவலர் / கண்காணிப்பாளர் மற்றும் தொடர்புடைய அலுவலர்களே பொறுப்பாவார்கள்.

On line இல் இணையதள வழியில் பதிவு செய்வதற்கான பயனர்குறியீடு (user Name), கடவுச்சொல் (Password) அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் /திட்டஅலுவலரின் மின்னஞ்சல் முகவரிக்கு (E-mail) அனுப்பப்படும். On line இல் பதிவு செய்தலில் ஏதேனும் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திருமதி. எழில்சுந்தரி
கண்காணிப்பாளர்
பழங்குடியினர் நல இயக்குநரகம்
Cell No - 9698968635

மேலே குறிப்பிட்ட காலகெடுவிற்குள் 02.11.2023 முதல் 15.11.2023 பிற்பகல் 6.00 மணிவரை மட்டுமே விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். அதற்கு மேல் பதிவு செய்யப்படும் விண்ணப்பங்களை Online இல் பதிவு செய்ய இயலாது. எனவே இதில் சுணக்கம் ஏதும் இன்றி சிறப்பு கவனம் செலுத்தி விரைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

விண்ணப்பங்கள் பதியப்படாமலோ தவறுகளோ குளறுபடிகளோ ஏற்பட்டால் அதற்கு அந்தந்த திட்ட அலுவலர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களே பொறுப்பாவார்கள்.

இணையதளத்தில் பதிவு செய்வது தொடர்பானவழிமுறைகள்

- http://onlinetn.com
- மேற்கண்டஇணையதள Address இல் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளள பயனர்குறியீடு (User Name)
- மற்றும் கடவுச்சொல் (Password) கொண்டு login செய்யவும்.
- "Trasfer Application "icon ஐ click செய்யவும்.
- பிறகு(.) add ஐ click செய்தால்" General Transfer Request Application addition " pop up menu open ஆகும்.
- முதலில்Applicant Name, Initial ஐ type செய்யவும்.. பிறகு Gender ஐ select செய்யவும்.
- "Select School / office " என்ற Menu Tab ஐ click செய்தால் மற்றொரு Pop-up Menu தோன்றும்.
- அதில் Category District Place, School Name Post மற்றும் Subject ஐ select செய்தால் Present Post மற்றும் School Name தானாகவே தெரியும்.
- Date of Birth முதல் Transfer request is for வரையுள்ள Field களில் Select செய்யவேண்டியவைகளை Select செய்யவும் . மற்றவற்றைType செய்யவும்.
- Save என்ற Button ஐ click செய்தால் : General Application Details" என்ற Pop-up Menu open ஆகும். அதில்தாங்கள்select / type செய்தவிவரங்களைசரிபார்க்கவும்.
- Select type செய்த விவரங்களை சரியாக இருப்பின் "Confirm" என்ற Button ஐ click செய்யவும் அல்லது தவறாகஇருந்தால் cancel என்ற Button ஐ click செய்யவும்.
- ஒரு முறை "Confirm" என்ற Button ஐ click செய்துவிட்டால் தங்களால் விண்ணப்பத்தாரர்களுக்காக தட்டச்சு செய்யாத விவரங்களை மீண்டும் மாற்ற இயலாது.
- "Confirm" செய்தபிறகு அடுத்த விண்ணப்பதாரர்களுக்கான விவரங்களை General Transfer Request Application னிலேயே தொடரலாம்.

- On lineல் விண்ணப்பதாரர்களின் விவரங்கள் தவறாக வழங்கப்பட்டால் அந்த விண்ணப்பங்கள் பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் சரிபார்க்கப்பட்டு நிராகரிக்கப்படும். அவர்கள் On line கலந்தாய்வில் கலந்துக் கொள்ள இயலாது.
- விடுமுறை நாட்களிலும் இப்பணியினை மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் / திட்டஅலுவலர்கள் (பழங்குடியினர்நலம்) மற்றும் தொடர்புடைய பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

*கலந்தாய்வு அட்டவணை*

| வ.எண் | நாள் | விவரம் |
|---|---|---|
| 1 | 02.11.2023 முதல் 15.11.2023 | பணிமாறுதல் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவு செய்தல் |
| 2 | 17.11.2023 | முன்னுரிமை பட்டியல் வெளியிடுதல் |
| 3 | 17.11.2023 முதல் 20.11.2023. | ஆட்சேபனை பெறுதல் |
| 4 | 21.11.2023 | இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் |
| 6 | 22.11.2023 முற்பகல் | அனைத்து நிலை தலைமையாசிர்கள் / முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் / கணினி பயிற்றுநர் / உடற்கல்வி இயக்குநர் / சிறப்பாசிரியர்கள் / உடற்கல்வி ஆசிரியர் |
| 7 | 23.11.2023 பிற்பகல் | பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், காப்பாளர் மற்றும் காப்பாளினி. |

ஒம்/-ச.அண்ணாதுரை

பழங்குடியினர் நல இயக்குநர்

31/10/2023

பழங்குடியினர் நல இயக்குநருக்காக

31/10/23